**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.181** **நாள் : 03.06.2026**

**வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பூங்கா, நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம் மற்றும் நவீன மாடுகள் காப்பகம் ஆகிய வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.06.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-150க்குட்பட்ட பகுதியில் உள்ள டாக்டர் எம்.எஸ்.சுவாமி நாதன் ஈரநில பசுமைப் பூங்காவினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சுற்றுச்சூழலை பேணி காத்திடும் வகையில் பூங்காவினை பசுமையாகப் பராமரித்திடவும், தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலம், வார்டு-158க்குட்பட்ட நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகரில் ரூ.7.86 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள நவீன மாடுகள் காப்பகத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தற்பொழுது காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 20 மாடுகளுக்கு உணவு மற்றும் மருத்துவப் பராமரிப்பு மற்றும் காப்பகத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தொடர்ந்து, அப்பகுதியில் கட்டடக் கழிவுகள் சேகரிக்கும் மையத்தினைப் பார்வையிட்டு சேகரிக்கப்படும் கட்டடக் கழிவுகளை உரிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும், தெருக்களில் கட்டடக் கழிவுகள் கொட்டுவதைக் கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டல அலுவலர்கள் திரு.புருஷோத்தமன், திரு.எஸ்.முருகதாஸ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**